# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம்

---

*[1982, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---


1982, மார்ச்சு மாதம் 26 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 35     தபாற் செலவு : சதம் 50

## *1982 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, கப்பற்றெழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம்*

*[1982, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச.வ.—ஓ. 2/81
1460

*1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றெழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, கப்பற்றெழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தில் 13அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

2. 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றெழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது, அச்சட்டத்தின் 13அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" தொழில்தருநரின் அல்லது சேவையாளின் தவறுதல்களுக்கு கப்பற்றெழில் முகவர் பொறுப்பாதல்.

13அ. இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு, எவரேனும் கப்பற்றெழில் முகவரின் எவரேனும் ஊழியரினால் அல்லது சேவையாளினால் அத்தகைய முகவரின் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது புரியப்படுகின்றவிடத்து, அத்தகைய தவறு, அத்தகைய கப்பற்றெழில் முகவர் அறிந்திருக்காது புரியப்பட்டதென அவர் எண்பித்தாலன்றி, அத்தகைய தவறு அத்தகைய கப்பற்றெழில் முகவரால் புரியப்பட்டுள்ளதென்று கருதப்பட வேண்டும்.".

ஈ 61746—6,825 (82/02)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.